**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 - 2023**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 ஆனது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் காலப்பகுதி 2024 பெப்ரவரி 29 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2:1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 3 இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ADB மற்றும் ERD இன் அங்கீகாரத்துடன் செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்வதற்காக கொழும்பு மாநகர சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 500 மில்லியன் தொகையான 3349-SRI ஆம் இலக்க ADB கடன் மீதி நிதி நிலைமை கூற்றில் தனியான நிதிப் பொறுப்பாக குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக செயற்திட்டத்தின் தற்போதுள்ள கடனுடன் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 500 | 3349-SRI ஐ தனிக் கடனாகக் குறிப்பிடும் நிலையில் நாங்கள் இல்லை, ஏனெனில் இது எமது செயற்திட்டத்திற்கு வழங்கப்படவில்லை, இது செயற்திட்டத்தின் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு CMC இடமிருந்து ஐ.அ.டொலர் 3.5 மில்லியன் நிதி ஏற்பாடு ஆகும். எனவே 3349-SRI கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் கடன் குறியீட்டைக் குறிப்பிடாமல் பகுதி 3 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நிதி ஏற்பாட்டினை தனியான செயற்திட்ட நிதி வளமூலமாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ | ICB 01 ஒப்பந்தத்தின் ஒப்பந்ததாரருக்கு ரூபா 698 மில்லியன் தொகை வேலை நிறைவேற்று சான்றிதழ், கொடுப்பனவு அங்கீகாரம் மற்றும் தொடர்புடைய ஏனைய ஆதார ஆவணங்கள் மூலம் பொறுப்பு உறுதி | 698 | ICB-01 ஒப்பந்ததாரருக்கு 2023.12.31 இல் ரூபா 698 மில்லியன் தொகையானது தற்காலிகமாகச் செலுத்தப்பட வேண்டியதாக கருதப்பட்டது, சொத்து மூலதனமாக்கலை முடிப்பதற்காகவும், கணக்கை இறுதி செய்வதற்காகவும், | அனைத்து கணக்கீட்டு உள்ளீடுகளும் துணை ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| செய்யப்படாமல் இறுதி விலைப்பட்டியலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | | அந்தத் தொகை அட்டுறுவாக எடுக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இறுதி செய்யப்பட்ட தொகை உறுதிசெய்யப்பட்ட போது அந்தத் தொகை மாற்றப்பட்டு அதற்கிணங்க உண்மையான பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டது. | |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன ான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2.2.1 | நிதிப்பிரமாண இல. 502(2) | செயற்திட்டத்தால் பெறப்பட்ட அனைத்து நிலையான சொத்துக்களின் புதுப்பிக்கப்பட்ட விபரங்கள் உள்ளடங்கிய நிலையான சொத்துப் பதிவேட்டை செயற்திட்டம் பேணியிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிலையான சொத்துக்களை கைப்பற்றும் பணி இடம்பெற்று வருகிறது. | நிலையான சொத்துப் பதிவேடு நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பேணப்பட வேண்டும். |
| 2.2.2 | நிதிப்பிரமாண இல. 128(1) உ, இல.507, இல.756 | வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2024 ஏப்ரல் 10 வரையிலும் இது செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரதி சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த து. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

**3.1** செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 03 கூறுகளை உள்ளடக்கியதுடன் ரூபா 4,940 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38 மில்லியன் அந்த 3 கூறுகளின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதில், செயற்திட்டம் 01 மற்றும் 02 இற்கான நிதி இடைவெளியை நிரப்புவதற்கு மேலதிக நிதியுதவிக்காக ரூபா 4,550 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட அபிவிருத்தி உதவி பணிகளிற்காக ரூபா 390 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியன் மீதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ஐ.அ.டொலர் 38 மில்லியனில் 78.52 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,825.43 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 29.84 மில்லியன் (தற்போதுள்ள நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம்) மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 7 ஆண்டுகள் கடந்த பின்னரும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்திட்டமானது ஆலோசகரின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்ளாமல் கால நீடிப்புக்களின் அடிப்படையில் ADB நிதியைப் பயன்படுத்தி முரண் கட்டளைகள் மூலம் காலநீடிப்பு உரிமைக்கோரிக்கைகளாக ஐ.அ.டொலர் 385,759.65 கூட்டு ரூபா 345 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 1,637,367.61 கூட்டு ரூபா 89.7 மில்லியன் தொகையை முறையே ICB 01 மற்றும் ICB 02 ஒப்பந்தங்களின் பிரதான ஒப்பந்ததாரர்களுக்கும் ரூபா 436.48 மில்லியனை ICB 03 ஒப்பந்ததாரருக்கும் செலுத்தியிருந்தது. | ICB - 3 ஒப்பந்தத்தின் நீடிப்பு உரிமைகோரலை மதிப்பிடும்போது, செயற்திட்ட ஆலோசகர்களின் சேவை காலம் காலாவதியாகியிருந்ததுடன் 2022 ஒக்தோபரிற்கு அப்பால் ஆலோசனை ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை. எனவே ICB-03 உரிமைகோரல் NWSDB இன் PMU/PIU பதவியணியினரால் மதிப்பிடப்பட்டது. | செயற்திட்ட முரண் குழு, கொடுக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் அத்தகைய கொடுப்பனவுகளை அங்கீகரிக்க வேண்டும், விசேட தேவை இருந்தால் நிதியை விடுவிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | ICB 3 ஒப்பந்தத்தின் பிரதான ஒப்பந்ததாரர் ஐ.அ.டொலர் 372,488 மற்றும் ரூபா 505.99 மில்லியன் தொகையை காலநீடிப்பு உரிமைகோரல்களாக கோரியிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டம் முரண் கட்டளை மூலம் ரூபா 436.48 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,023,338 மற்றும் ரூபா 98.21 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. மேலும் செயற்திட்டமானது முறையான அங்கீகாரம் இல்லாமலும் நாட்டில் நிலவும் வெளிநாட்டு நாணய நெருக்கடியைக் கருத்தில் கொள்ளாமலும் கோரப்பட்ட ரூபா தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு ஒப்பந்ததாரர் கோரிய ஐ.அ.டொலர் தொகையை விட ஐ.அ.டொலர் 650,850 ஐ அதிகமாக செலுத்தியிருந்தது. மேலும், நீர் வழங்கல் சபையின் மேலதிக பொது முகாமையாளர் மேற்படி ரூபா 436 மில்லியன் பெறுமதியிடப்பட்ட முரண் கட்டளையை பரிந்துரைத்திருந்ததுடன் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை மீறி பொது முகாமையாளர் சார்பாக அங்கீகாரத்திற்காக கையொப்பமிட்டார். | செயற்திட்டமானது ICB – 3 ஒப்பந்தத்திற்கான நீடிப்பு உரிமைக்கோரலை மதிப்பிடும் போது, அது EOT – 7 வரை கருதப்பட்டது. பின்னர். ஒப்பந்ததாரர் கோரிக்கைத் தொகை CYN 50,822,695.83 கூட்டு ஐ.அ.டொலர் 131,635.49 கூட்டு இலங்கை ரூபா 621,468,876.68 ஆக உள்ள போதிலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுப்பனவு USD & LKR இல் மாத்திரமே சான்றுபடுத்தப்பட முடியும். எனவே, ஐ.அ.டொலர் 1,023,338 கூட்டு இலங்கை ரூபா 98,211,794.09 பரிந்துரைக்கப்பட்டது. மேலும், அங்கீகார காலப்பகுதியின் போது, பொது முகாமையாளரின் சார்பாக மேலதிக பொது முகாமையாளர் (WSP) மேவுகை கடமையைச் செய்கிறார். | உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | EOT ஆவணங்களின் பிரகாரம், ஒப்பந்த பெறுமதியை தவிர மேலதிக கிரயத்தை கோருவதற்கு தங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று ஒப்பந்ததாரர்கள் இணங்கியிருந்தனர், எனினும், மேற்படி நிபந்தனையை மீறி ரூபா 532.91 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 3,046,465.26 தொகையான ஒப்பந்ததாரரின் முரண் உரிமைக்கோரல்களிற்காக செலுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கையை எடுத்திருந்தது. | உப உட்பிரிவு 10.1 [பணிகள் மற்றும் பிரிவுகளை கையேற்றல்] இன் நோக்கங்களுக்காக பூர்த்தி செய்தல் பின்வரும் காரணங்கள்: ஒரு முரண், தொற்றுநோய் அல்லது அரசாங்க நடவடிக்கைகள் காரணமாக பணியாளர்கள் அல்லது பொருட்கள் கிடைப்பதில் எதிர்பாராத பற்றாக்குறை & போன்றனவற்றில் ஏதேனும் ஒரு காரணத்தால் தாமதமாகிறது அல்லது தாமதமாகும் என்றால் அந்த அளவிற்கு பூர்த்திசெய்வதற்கான கால நீடிப்பிற்கு FIDIC இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனை உட்பிரிவு 8.4 – உப உட்பிரிவு 20.1 [ஒப்பந்ததாரரின் உரிமைக்கோரல்கள்] இற்கு உட்பட்டு ஒப்பந்ததாரருக்கு உரித்துண்டு.<br><br>EOT வழங்கப்பட்ட போது மேற்படி அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. அதன் பிரகாரம், சில EOTs இற்கான காலத்தையும் கிரயத்தையும் தொழில்தருநர் ஒப்புக்கொண்டதுடன் ஒப்பந்ததாரரின் உடன்படிக்கையுடன் சில சந்தர்ப்பங்களில் மாத்திரமே காலம் வழங்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல்/ திறமையின்மை மற்றும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ICB 01 மற்றும் ICB 02 ஒப்பந்தங்களின் பௌதீக பணிகள் முறையே 2022 மார்ச் 15 மற்றும் 2022 மே 21 இல் பூர்த்திசெய்யப்பட்டுள்ள போதிலும் செயற்திட்டத்தால் கணக்காய்வு திகதியான 2024 மே வரையிலும் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ICB-01 மற்றும் ICB-02 ஆகியவற்றின் ஒப்பந்தத் தொகைகள் அதிகரிக்கப்பட வேண்டும், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் தேவைப்பட்டது. அதன் பிரகாரம், 2024 பெப்ரவரியில் ஒப்பந்தத் தொகையை | மீறப்பட்ட ஒப்பந்த பெறுமதி மற்றும் ICB 03 மற்றும் ICB 04 ஒப்பந்தங்களின் ஏதேனும் மேலதிக கொடுப்பனவு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மேலும் மேற்படி இரண்டு ஒப்பந்தங்களும் பூர்த்தியடைந்து 2 ஆண்டுகள் கடந்த போதிலும், இறுதி விலைப்பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் FIDIC நிபந்தனைகள் உட்பிரிவு 7.6 இன் பிரகாரம் இறுதிப் பொருள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உயர்த்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை செயற்திட்டம் பெற்றுள்ளது. அமைச்சரவை அங்கீகார செயன்முறை 12 மாதங்களுக்கும் மேலாக எடுத்தது. மேலும் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் இறுதி விலைப்பட்டியல்களில் குறைபாடுகள் இருந்ததால் தாமதம் ஏற்பட்டது. தற்போது, ICB-01 & ICB-02 இறுதி விலைப்பட்டியல்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. பொருள் இணக்கமானது இறுதி விலைப்பட்டியல்களின் இறுதிப்படுத்தலுடன் தொடர்புடையதாகும். தற்போது அதுவும் ICB-01 மற்றும் ICB-02 ஆகிய இரண்டிற்கும் பூர்த்தியடைந்திருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தல், பூர்த்திசெய்தலிலுள்ள தாமதங்கள் மற்றும் நிதிகளின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இந்த அறிக்கையில் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்திட்டத்தின் குறைந்த செயலாற்றல் காரணமாக, நிதி வழங்குவதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் காட்டப்பட்டதுடன் அதன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 183 மில்லியன் கடப்பாட்டு கட்டணங்களை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3348-SRI கடனுக்கான ADB இன் திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் 2016 ஆகஸ்ட் முதல் கடனிலிருந்து இலங்கை ரூபா 183 மில்லியன் ஆகும். இந்தக் கடன் 3348-SRI ஆனது 2947-SRI மற்றும் 3029-SRI ஆகியவற்றின் மேலதிக நிதித் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக பெறப்பட்டதுடன் 3348-SRI கடனைப் பயன்படுத்துவதற்கு இந்தக் கடன்களை முடிக்க வேண்டும். எனினும், பல்வேறு காரணங்களால் 2947-SRI மற்றும் 3029-SRI பணவளிப்பு எதிர்பார்த்தவாறு நடைபெறவில்லை, எனவே ADB இற்கான கடப்பாட்டுக் கட்டணங்களின் கொடுப்பனவு காரணமாக 3348-SRI ஐப் பயன்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. | பொருளாதாரச் செலவினங்களைத் தவிர்க்கும் வகையில், முழு செயற்திட்டத்தையும் மேலதிக தாமதமின்றி பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவானது செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட காலத்தில் அவ்வப்போது கணக்காய்வை மேற்கொண்டிருந்தது. | உள்ளக கணக்காய்வை தொடர்ந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |